வேண்டுமென்று என்னுடைய அறையில் வந்து கேட்கவில்லை. அப்படி கேட்காமல், இப்படி திடீரென்று வந்து, அவையின் நேரத்தை வீணடிக்கிறீர்களே? (குறுக்கீடுகள்) இப்பொழுது கேள்வி நேரம். நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் கேள்வி நேரத்தில் இப்படி எழுப்புவது தவறு. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்த பிறகு zero hour-ல் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். அதற்கு முன்னால், விதிகளின்படி முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் நேரம். (குறுக்கீடுகள்) இல்லை, அப்படியெல்லாம் செய்ய முடியாது. விதிகளின்படி அவையை நடத்த விடுங்கள். நீங்கள் இப்படியெல்லாம் விதிகளை மீறி வாய்ப்புக் கேட்டால், நான் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். கேள்வி நேரம் முடிந்தவுடனே உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்த பிறகுதான் உங்களுக்கு வாய்ப்புத் தரப்படும், உட்காருங்கள்.

80—

பறவைகள் சரணாலயம்

***251 திரு. எச். வசந்தகுமார்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எங்கள் இதய

2016 ஆகஸ்ட் 18]

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால்... (குறுக்கீடுகள்) 1994 ஆம் ஆண்டு 129 ஹெக்டேர் பரப்பில் தொடங்கப்பட்ட கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் உரிய வகையில் மேம்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். பொறுமையாக இருங்கள். நீங்கள் அவசரப்படாதீர்கள். உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்தவுடன்* zero hour-*ல் நீங்கள் கேட்க விரும்புகிற கேள்வி என்னவோ, அதை அப்பொழுது கேட்கலாம். வினாக்கள்-விடைகள் நேரத்தில் இப்பொழுது அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எம். இராமச்சந்திரன், உங்கள் இடத்தில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்கள் இடத்தில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உங்கள் இடத்தில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் (திருமதி) பூங்கோதை, திரு. இ. பெரியசாமி, உங்கள் இடத்திலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன் அல்லவா? உட்காருங்கள். நீங்கள் சட்டமன்ற விதியை மதியுங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அதையெல்லாம் இப்போது கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் இப்படிப் பேசுவது முறையல்ல. திரு. கரி. இராமசாமி, நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் என் அறையில் வந்து கேட்காமல், இப்போது கேட்கிறீர்களே? இது என்ன முறை? எந்த விதியின் அடிப்படையில் நீங்கள்* raise *பண்ணுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) திரு. கரி. இராமசாமி, வினாக்கள்-விடைகள் நேரத்தில், எந்த விதியின் அடிப்படையில் இப்படி* raise *பண்ணுகிறீர்கள்? நீங்கள் என் அறையில் வந்து அனுமதியும் கேட்கவில்லை. நீங்கள் இப்போது என்ன கேட்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் நான் உங்களைப் பேச* allow *பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் நேரம் என்று பேரவை விதிகளில் இருக்கிறது. ஓர் உறுப்பினர் ஆட்சேபித்தால்கூட வினாக்கள்-*

விடைகள் நேரத்தை மாற்ற முடியாது என்று பேரவை விதிகளில் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, இன்றைக்கு Agenda-வில் முதல் item ஆக வினாக்கள்-விடைகள் என்று போட்டிருக்கிறோம். Agenda-வின்படி வினாக்கள்-விடைகள் முடிந்தவுடன், விதிகளில் உள்ள வாய்ப்புகளின்படி, zero hour-ல் நீங்கள் raise பண்ணலாம். அப்போது நீங்கள் என்ன raise பண்ண வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அதை raise பண்ணலாம். நான் இப்போது உங்களைப் பேச allow பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தை நடத்தி முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா, கிருஷ்ணா' என்று பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, இஸ்லாமியர்கள் 'இறைவனிடம் கையேந்துங்கள், அவன் இல்லையென்று சொல்லுவதில்லை' என்று சொல்வார்கள். அதேபோல, கிறிஸ்தவர்கள் 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும்' என்று சொல்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, கேட்டால்தான் கொடுக்கப்படும் என்பதை மாற்றி, கேட்காமலேயே கொடுக்கக்கூடிய தமிழகத்தின் இணையற்ற முதலமைச்சராக, (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வத் திருமகளாகத் தமிழகத்தில் வீற்றிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருப்பாதங்களை வணங்குகிறேன்.

கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொன்னபடி, தயவுசெய்து அமருங்கள். zero hour-ல் ஒரு பிரச்சினையை raise பண்ண வேண்டுமென்று என்னுடைய அறையில் வந்து அனுமதி கேட்டால்தான் அனுமதி கொடுப்பது வழக்கம். நீங்கள் கேட்கவில்லை என்றாலும்கூட பரவாயில்லை; என்னுடைய அறையிலே வந்து கேட்கவில்லை என்றாலும்கூட, வினாக்கள்-

2016 ஆகஸ்ட் 18]

விடைகள் நேரம் முடிந்தவுடன் நீங்கள் பேச எழுந்தால், நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். இப்போது நீங்கள் எதுவும் raise பண்ண முடியாது, உட்காருங்கள். வினாக்கள்-விடைகள் நேரத்தை வீணடிக்காதீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை ஆண்டு வருகிற, தரும தேவதையாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழகத்திலே மயில்களினுடைய எண்ணிக்கை பெருகி வருகிறது. விவசாய விளை நிலங்களில் அது பெரும் சேதத்தை ஏற்படுத்துகிறது. அது நமது தேசியப் பறவையாக இருக்கின்ற காரணத்தால் விவசாயிகளின் நிலத்தில் அவை இறந்துவிட்டால் கடுமையான சட்டம்மூலம் விவசாயிகளின்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, பெருகிவருகின்ற அந்த மயில்களின் எண்ணிக்கையைக் குறைக்க, இனப்பெருக்கத்தைக் குறைக்க, மயில்கள் முட்டையிடுகின்ற பகுதியில், அதன் முட்டைகளைச் சேகரித்து வனத் துறைக்குக் கொண்டுவந்து சேர்த்தால், அதற்கு சன்மானம் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவு நேரம் இந்த மாதிரி பேசிக்கொண்டு இருந்தாலும், வினாக்கள்-விடைகள் நேரம் முடியாமல் உங்களைப் பேச நான் அனுமதிக்க முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அமருங்கள். வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்தவுடன், நீங்கள் கேள்வி கேட்க நான் உங்களுக்கு அனுமதி தருகிறேன். இப்போது zero hour இல்லை. இது வினாக்கள்-*

விடைகள் நேரம். இப்பொழுது வேறு எதையும் நான் அனுமதிக்க முடியாது. நீங்கள் பேசினால் பேசிக்கொண்டே இருங்கள். எனக்கு வேறு வழியில்லை. (குறுக்கீடுகள்) விதிகளின்படி முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் நேரமாக நடத்த வேண்டியது என்னுடைய கடமை. அந்தக் கடமையை தயவுசெய்து என்னைச் செய்ய விடுங்கள். நீங்கள் இந்த மாதிரி குறுக்கீடு செய்வது விதிகளுக்கு முரணானது என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் வனத் துறை அமைச்சராக இருந்தவர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விவசாயிகளினுடைய பயிர்களை மயில்கள் வதைக்கின்றன, நாசமாக்குகின்றன, அதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த அரிய கருத்துகளோடு, அவரிடமிருந்து மேலும் விவரங்களைப் பெற்று, விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், மயில்களைக் கட்டுப்படுத்துவதற்கு வனத் துறையின் மூலமாக அரசு பரிசீலனை செய்யும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர் அவையிலிருந்து வெளியேறினர்.)